தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

துணர் ௫௰

நள ஆண்டு

1976-'77

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சாவூர்.

பொழிற்றொண்டர்

திரு. அரங்க. வே. சுப்பிரமணியம்,

பி. ஏ.

உள்ளுறை

நள ஆண்டு துணர் ௫௰. மலர் ௧-௰௨.

(1976 — '77)

பக்கம்.

1. அகல் விளக்கு
- திரு. இராம. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்., பி. லிப். சயின்ஸ் 45

2. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
- கருத்தரங்குச் சொற்பொழிவுகள் 19, 101, 157, 178

3. அருவியிலே எழுதியிட்ட ஓலை
- ஆசிரியர். மேஜர் அ. கிருட்டினமூர்த்தி 282

4. ஆகு பெயர் - டாக்டர் மோ. இசரயேல் 249

5. இமயமும் குமரியும்
- ஆசிரியர். மேஜர் அ கிருட்டினமூர்த்தி 279

6. இளங்கோவடிகள் தமிழ்க் கழகம் - ஆண்டு விழா 112

7. இளைய பாரதம்
- மதிப்புரை - ஆசிரியர் திரு. ரா. பொன்ராசன் 230

8. உவமையின் தோற்றமும் தொன்மையும் - ஓர் ஆய்வு
பேராசிரியர்
திரு. கோதண்டபாணி, எம்.ஏ., எம்.ஓ.எல். 34

9. கண்ணகி கோட்டம் - வரலாற்றுச் சான்றுகள்
- பேராசிரியர் திரு. கோ. தெய்வநாயகம், எம்.ஏ. 12

10. கருந்திட்டைக்குடியின் கல்வெட்டுச் சிறப்பு
- செல்வி கோ. கார்த்தியாயிணி, எம்.ஏ. 215

11. கன்னித் தமிழ்
- திரு ந. மு. கோவிந்தராய நாட்டார், பி.ஏ., எல்.டி. 85

12. காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்
- நெல்லை ந. சொக்கலிங்கம், எம்.ஏ. 113

13. குறளில் வீட்டியல்
- திரு. க. சோமசுந்தரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
27, 94, 182, 209

14. சித்தர் - சித்தர்-நூல்கள் ஒரு கண்ணோட்டம்
- பேராசிரியர் ச. பாலசுந்தரம் 169, 197, 259

15. சிரிப்பு - புலவர் பொன்னியின் செல்வன் 283

16. சிலப்பதிகாரத்தில் கண்ணன்
- திரு. ஏ. ஏகாம்பரநாதன் எம். ஏ. 29

17. தமிழக நெஞ்சத்தில் - திரு. கோ. தேவ் 224

18. தமிழர் மாநாடு (திருநெல்வேலி - 1934)
- தலைமைப் பேருரை
திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல். 141

19. தமிழிலக்கியங்களில் வடமொழி இராமாயணக்
கருத்துக்கள் - திரு. ஏ. ஏகாம்பரநாதன், எம்.ஏ. 122

20. தமிழிலும் இந்தியிலும் ஏவல் வினை அமைப்பு - ஓர்
உறழ்நிலை ஆய்வு - டாக்டர் திருமதி. க. புட்பவல்லி 52

21. தமிழ்த்தொண்டு - பேராசிரியர் ச. பாலசுந்தரம் 135, 158

22. ''தவ'' - திரு. இரா. இளவரசு, எம்.ஏ., பி.எச்டி. 77

23. திருக்குறளில் பௌத்தம் - திரு. சோ. ந. கந்தசாமி,
எம்.ஏ., எம்.லிட், பி.எச்டி. 57

24. பம்பாய்ப்பத்து - திரு. ந. மு. கோவிந்தராய
நாட்டார், பி.ஏ.எல்.டி. 155

25. பரதரும் - பரதவரும்
- பேராசிரியர் திரு. கோ. தெய்வநாயகம், எம்.ஏ. 102

26. பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுத் தரும் வரலாறு
- பேராசிரியர் திரு. கோ. தெய்வநாயகம், எம்.ஏ.
129, 160, 185

27. பாண்டியன் பரிசில் பூதம்
- நெல்லை திரு. ந. சொக்கலிங்கம், எம்.ஏ. 303

28. பாய்கலேப் பாவை - திரு. ஏ. ஏகாம்பரநாதன், எம்.ஏ. 189

29. பாவேந்தரின் காதலா? கடமையா?
- திரு. இராம. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல்.,
பி.லேப்.சயின்ஸ். 79

30. புரட்சிக்கவிஞரின் ஏற்றப்பாட்டு
- திரு. இராம. சுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல்.,
பி.லேப். சயின்ஸ் 225

31. பூப்பந்திட்டாடுவோம்
- பேராசிரியர் திரு. ச. பாலசுந்தரம் 109

32. பெயரின் ஆகிய தொகை
- டாக்டர் திரு. மோ. இசரயேல் 82, 97

33. பெருங்கதையில் இசை - டாக்டர் ஏ. என். பெருமாள் 231

34. போர்ப்பத்து - திரு. ந. மு. கோவிந்தராய
நாட்டார், பி.ஏ., எல்.டி. 127

35. மண்ணில் வளையாத செங்கோல் வளைந்தது
- திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார்பி.ஏ., எல்.டி. 23

36. வடிவமும் வள்ளுவர் குறிக்கோளும்
- திரு. கு. மோகனராசு, பி.எசி., எம்.ஏ. 284

37. வரந்தருகாதையின் வரலாறு 1
- திரு. அ. தட்சணுமூர்த்தி, எம்.ஏ., பி.எட்.

38. விளையாடல் புரிவோம் வம்மின்
- பேராசிரியர் திரு. ச. பாலசுந்தரம் 110

39. விளையாட்டு - பேராசிரியர் திரு. ச. பாலசுந்தரம் 108

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருய	திருவள்ளுவர் யாண்டு உயஎ நள, சித்திரை (1976 — ஏப்ரல் — மே)	மலர் க

வரந்தரு காதையின் வரலாறு

அ. தட்சிணமூர்த்தி, எம். ஏ., பி. எட்.,

அ. வீ. வா. நினைவு திரு புட்பம் கல்லூரி, பூண்டி.

சிலப்பதிகாரம் தமிழன்னையின் திருக்கழுத்திற் கிடந்து அசைந்தாடும் மணியாரம் இதன் ஆசிரியர் இமயத்தில் விற்பொறித்த செங்குட்டுவனின் இளவலாகக் கருதப்பட்டு வருகிறார். இச்செய்தி பற்றித் தமிழறிஞரிடையே தோன்றிய கருத்து வேறுபாடு உலகறிந்த செய்தியாகும். வரலாற்றறிஞர் நீலகண்டசாத்திரியார் அவர்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவர் இவர் சிலப்பதிகாரம் கி. பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதன்று என்கிறார். ஆனால் சிலம்பு கூறும் செட்குட்டுவன்-கயவாகு காலவொற்றுமையை ஏற்கிறார். இவ்விருவேந்தரும் சமகாலத்தவர் என்ற வரலாற்று மெய்ம்மை பற்றிய மக்கள் நினைவைச் சிலப்பதிகாரம் காத்து வைத்திருக்கிறது என்பது அவர் கருத்து. எனவே இவர் வரந்தருகாதையிலும், பதிகத்திலும் வரும் செங்குட்டுவன்-இளங்கோ உறவு பற்றிய செய்தியை ஏற்கவில்லையென்றுகிறது. சிலம்பு கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை போன்றோர் கருத்தாகும். எனவே இவரும் இளங்கோ செங்குட்டுவனின் தம்பியல்லர் என்ற கருத்துடையவராகிறார். வேறு சிலர் 'கயவாகு' என்று சிலம்பில் குறிக்கப்பட்டவன் கி. பி. 11ஆம் நூற்றாண்டிலாண்ட இரண்டாம் கயவாகுவே என்று கொண்டு சிலம்பு அந்தக் காலத்தது என்பர் பேராசிரியர் பி. தி. சீனிவாசய்யங்கார் தம்முடைய 'தமிழர் வரலாறு' என்னும் ஆங்கில நூலில் வஞ்சிக்காண்டம் பின்வந்த ஒருவரால் இயற்றப்பட்டது என்றும் சிலம்பு ஓர் இரட்டை நூல் என்றும் நாட்டப் பெரிதும் முயன்றார். எனவே சிலம்பின் காலம் கி. பி. 3ஆம் நூற்றாண்டு

முதல் 11ஆம் நூற்றுண்டு வரையில் பலவாருகக் கருதப் படுவதனைக் காணலாம் சிலம்பில் வரும் செங்குட்டுவன்-இளங்கோ உறவு பற்றிய செய்தியை அப்படியே நம்பி, செங்குட்டுவன் காலமே சிலம்பின் காலம் என நாட்ட முயன்ருேர் பலராவர். வஞ்சிக்காண்டம் சிலம்பாசிரியருடைய படைப்பே என்பதனை நிறுவச் சில ஆசிரியர்கள் மேற்கொண்ட முயற்சி மிகப்பெரிதாகும். ஒரு திறம் பற்ருது நடுநிலைக்கண் நின்று உண்மை காண்பது ஆய்வுரையாளர் கடமையாகும் சிலம்பு எக்காலத்ததாயினும் அதன் சிறப்பினைக் குறைத்து மதிப்பிட முடியாது என்ற எண்ணத்தோடு ஆய்ந்தால் உண்மைகாண்பது கடினமானதன்று.

ஆராய்ச்சியில் இறங்கு முன் தமிழுலகில் நெடுங்காலமாகவே இடைச்செருகல்கள் நிகழ்ந்துள்ளன என்பதனை நினைவு கூர்ந்து, அத்தகைய நிலை சிலம்பிலும் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதுவது தவருகாது. தக்கசான்றுகளைக் காட்டினுல் ஆய்வு மனங்கொண்டோர் ஏற்க மறுக்க மாட்டார்கள். எழுத்தில் தோன்றுவன வெல்லாம் உண்மையான வரலாறுதான் என்று கருதி ஆய்வில் இறங்கினுல் முடிவு சரியானதாக அமையாது இடர்ப்பட நேரும். ஒன்றை எழுதியோருடைய காலமும், அவர்களுடைய நோக்கமும் அவர்களுடைய ஆராய்ச்சி வன்மையும் பிறவுமான சூழல்களை வைத்தே நாம் கொள்ளவோ தள்ளவோ செய்யவேண்டும்.

முதற்கண் சிலம்பின் பதிகத்தை நோக்குவோம் இதன் ஆசிரியர் யாரென்று நாமறியோம். அவர் சிலம்பு வலியுறுத்தும் மூன்று உண்மைகளை ஆய்ந்து கண்டுள்ளார் சிலம்பின் காதைகள் முப்பதனையும் நிரல்பட எடுத்துக் காட்டியுள்ளார். நூலுட் சொல்லப்பட்ட கதை நிகழ்ச்சிகள் பலவற்றையும் குறிப்பிட்டுள்ளதோடு நூலில் காணும் தொடர்களையும் உள்ளவாறே எடுத்தாண்டுள்ளார். சிலம்பினை இளங்கோ பாட முடிவு செய்ததனையும் சாத்தனுர் 'நீரே அருளுக' என்று கூறியதையும் உரைக்கிருர், இஃது ஓர் பாட்டுடைச் செய்யுள் என்றும் கூறுகிருர். கூலவாணிகன் சாத்தனுர் இதனைக் கேட்டார் என்றும் கூறுவார். இவற்றைக் காணும் நமக்கு இவர் பெருபுலமையுடையார் என்றும். சிலம்பினை நன்கு கற்ற நம்பிக்கைக்குரியவர் என்றுமே எண்ணத் தோன்றுகிறது. ஆனல் கண்ணகியை வேங்கை மர நிழலில் கண்ட குறவர்கள் மலைவளங்காணச் சென்ற செங்குட்டுவனிடம் கூற அதனைச் சாத்தனுர் அரு

கிருந்து கேட்டு அவள் வரலாற்றைக் கூறினர் எனச் சிலம்பு கூறவும், பதிகம் குணவாயிற் கோட்டத்தில் அரசு துறந்திருந்த குடக்கோச்சேரல் இளங்கோவடிகட்குக் குறவர்கள் கூற அதனை அருகிருந்து கேட்ட சாத்தனர் அவருக்கு அவ்வரலாற்றைக் கூறினர் என்கிறது. எனவே பதிக ஆசிரியருடைய ஆராய்ச்சித் திறனில் நமக்கு ஐயமேற்படுகிறது. எனவே இளங்கோவடிகள் என்பவர் தான் சிலம்பின் ஆசிரியர் என்ற அவருடைய கருத்தினை நாம் ஏற்கத் தயங்குவதியல்பே யன்றோ? இதில் காணும் முரண்பாட்டைக் கண்ட நாவலர் நாட்டாரவர்கள் செங்குட்டுவனிடம் கண்ணகி பற்றிய செய்தியைக் கூறிய குறவர்கள் இளங்கோவிடமும் சென்று கூறினர் என்றும், செங்குட்டுவனிடமிருந்து வந்த சாத்தனர் அக்கதை நிகழ்ச்சிகளை இளங்கோவிற்கும் கூறினர் என்றும் கூறினர்.

முடிசூடி ஆளும் வேந்தனின் மகனையோ, தம்பியையோ இளவரசன் என்பது நமது மரபாகும் வரந்தரு காதையில் இடம்பெறும் குறிப்பை வைத்தே பதிக ஆசிரியர் நூலாசிரியர் சேர இளவரசர் என்று கருதியிருக்க வேண்டும். அவர் துறவியானவர் என்று அறிந்தமையாலும்; அவர் சமணராகலாம் என்ற கருத்திலுமே இளங்கோவடிகள் என்று கூறியிருக்க வேண்டும் ஆசிரியரின் இயற்பெயர் பதிக ஆசிரியர்க்குத் தெரியவில்லை. இன்னொரு கருத்தும் ஈண்டு நினையத் தக்கது பதிகத்தின் நடையும், நூலாசிரியர் வரலாறு கூறும் வரந்தரு காதையின் நடையும் பிற இயல்புகளும் சிலவகைகளில் ஒத்துள்ளன எனவே அவர் காலத்தில் வழங்கிய செவிவழிச் செய்தியைக் கொண்டு, தம் கற்பனையையும் கூட்டி இறுதியில் அமைந்த காதையையும் தாமே இயற்றிச் சேர்த்துப் பின் பதிகம் பாடினரோ என்றும் எண்ண வேண்டியுள்ளது. இது பற்றிப் பிறகு கூறுவோம். கி பி 13 ஆம் நூற்றாண்டினரான அடியார்க்கு நல்லார் முப்பது காதைகட்கும் உரை வரைந்துள்ளமையால் அவர் காலத்துக்கு முன்பே அது 30 காதைகள் கொண்டிருந்தமை புலப்படும்.

சங்ககாலம் என்பது கி, பி. 3 ஆம் நூற்றாண்டு வரையிலமைந்த காலப்பகுதி என்பர் அக்காலச் சமுதாய நிலையைப் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் காட்டும். அவை கொண்டு அறியும் சமுதாய நிலைக்கும் சிலம்பு தரும் சமுதாய நிலைக்கும் கடலனைய வேறுபாடுண்டு மொழி நடையிலும் பெரிய வேறுபாடுண்டு. இந்த வேறுபாடுகளை அறிஞர் பலர் எடுத்துக் காட்டித்தான் சிலம்பு பிற்காலத்து நூலென்கின்றனர். (சிலப்

பதிகாரச் சிந்தனைகள். டாக்டர். ப. அருணாசலம்) இந்த வேறு பாடுகட்குச் சிலர் கூறும் காரணங்கள் பொருந்துவனவாக இல்லை. முற்றிலும் வேறுபட்ட அரசியல், சமூக, சமயச் சூழலில் வாழ்ந்த ஓராறிஞரைச் சில நூற்றாண்டுகட்கு முன் ஆண்ட மன்னனுக்கு உறவினனாகக் காட்ட முயன்றதனால் விளைந்த விளைவே இது. நூல் பிற்காலத்தது என்று ஒப்புக்கொண்டால் நூலாசிரியர் செங்குட்டுவனின் தம்பியல்லர் என்றாகும். நூல் சங்க காலத்தது அல்லது சற்றுப் பிந்தியது என்று கொண்டால் சிலம்பில் வரும் மாறுபட்ட சூழல்கட்கு ஏற்ற காரணம் காட்ட வேண்டும். இவற்றில் முன்னது எளிது; பின்னது அரிதினும் அரிது;

"செங்குட்டுவனோடு எவ்வகையிலும் தொடர்பில்லாத ஒருவரை அவனுடைய தம்பியாகக் கூறுவானேன்?" என்ற வினா எழுகிறது வஞ்சிக் காண்டத்தின் பெரும் பகுதி செங்குட்டுவனின் வீரம் பற்றியதாக அமைந்துள்ளது. சேர மன்னர் பலரின் வரலாறும் கூறப்பட்டுள்ளது. இதனால் அவனோடு தொடர்புடைய ஒருவர்தான் எழுதியிருக்க வேண்டும் என்று மக்கள் கருதியிருக்கக் கூடும். மூவேந்தரில் ஒருவரைப் புகழ்ந்து ஏனையோரைத் தாழ்த்தாத பற்றற்ற நடுநிலையைக் கண்டு அவர் துறவி என்று கருதியிருக்கலாம், அத் துறவுக்கும் ஒரு காரணம் காட்டுவான் வேண்டி நிமித்திகன் கதையினைக் கற்பித்திருக்க இடமுண்டு.

சிலம்பு மூன்று காண்டங்களைக் கொண்ட காப்பியம் என்பதனை ஒப்புக் கொண்டே இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது. இங்கு வலியுறுத்த விரும்பும் கருத்து இந்நூலின் இறுதியிலமைந்த வரந்தரு காதை நூலாசிரியராலன்றி அவர்க்குப் பின் வந்த ஒருவரால் ஆக்கப்பட்டதென்பதே அதற்குரிய சான்றுகளை ஆய்வோமாக.

வஞ்சிக் காண்டத்தில் காதைகள் அமைந்துள்ளமையைக் கண்ணுற்றால் நூலாசிரியர் வெட்சித்திணையில் தொல்காப்பியர் கூறும் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்னும் ஆறு உட்பிரிவுகளின் அடிப்படையில் இக் காண்டத்தை அமைக்க எண்ணியுள்ளார் என அறியலாம் அதற்குமேல் வரும் வரந்தருகாதை மிகையாகவே படுகிறது. மங்கலவாழ்த்துப் பாடலோடு காப்பியத்தைத் தொடங்கியவர் வாழ்த்துக் காதையோடு நூலை நிறைவு செய்ய எண்ணுவதும் இயல்பேயன்றோ! மானுடப் பெண்ணைத் தெய்வமாக்கிக் காட்ட விரும்பினார் புலவர். அதிலே முழு வெற்றியடைகிறார் என்றே

கருதலாம். அவ்வெற்றி முழுமை பெறும் இடம் வாழ்த்துக் காதையே. இக்காதையிலே கண்ணகியோடு தொடர்புடைய பலரும் வருகின்றனர். தேவந்தி, காவற்பெண்டு, அடித்தோழி, ஐயை முதலியோர் வந்து அரற்றுகின்றனர். கண்ணகி தன் தெய்வவடிவோடு செங்குட்டுவன் முன் தோன்றுகிருள். அவன் பெரு வியப்பில் ஆழ்கின்ருன். தெய்வ வடிவில் தோன்றியவள் தன்னால் கொடுங்கோலன் என்று இகழப்பட்டவன் ‘ தீதிலன் ’ என்று தீர்ப்புக் கூறுகிருள், வென்வேலான் குன்றில் தான் விளையாட்டகலாள் என்றும் கூறுகின்ருள். வஞ்சிமகளிர் அவளை வாழ்த்துகின்ருர்கள். மூவர்க்கும் உரிய இக்காப்பியம் முடியப் போகிறது என்பதனை அறிவிக்கும் வகையில் பாண்டியன், சேரன், சோழன் ஆகிய மூவரும் வாழ்த்தப்படுகின்றனர்; இவ் வாழ்த்து ஒரே பாடலில் அமைகிறது. அடுத்து அம்மானையில் சோழனும், கந்துகவரியில் பாண்டியனும், ஊசல் வரியில் சேரனும் வாழ்த்தப்படுவர்; மீண்டும் வள்ளைப்பாட்டில் மூவரும் வாழ்த்தப்படுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாகத் தனக்குச் சிலையெடுத்த சேரனைக் கண்ணகி வாழ்த்துகின்ருள். சிலம்பு நாடகம் முடிந்து விட்டது என்ற உணர்ச்சி நன்குத் தோன்றி விடுகிறது. இதற்குமேல் நீளும் வரந்தருகாதை நாட்டுப் பண் பாடி முடித்த பிறகு கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுபோல் வேண்டாத ஒன்ருகவே தோன்றுகிறது.

வரந்தரு காதையின் மையமாக அமைவது சிறைவீடு பெற்ற வேந்தருக்கும், குடகக்கொங்கர், மாளுவவேந்தர், கயவாகு ஆகியோருக்கும் அவரவர் நாட்டில் செய்யும் நாளணி வேள்வியில் தான் வருவதாக வரம் கொடுப்பதே. இச்செய்தியை ஆசிரியர் கூற எண்ணியிருப்பின் வாழ்த்துக் காதையிலேயே கூறியிருப்பார். செங்குட்டுவனுக்கு வரமருளியபொழுதே ஏனையோரும் வேண்ட அவர்க்கும் வரங்கொடுத்தாள் என்று கூறியிருப்பார். இவ்வாறு கதையை மேலும் நீட்ட எண்ணியதேன்? இப்பகுதியை இயற்றிய ஆசிரியர் கண்ணகியைச் சேரன் மட்டுமன்றிச் சுற்றுப்புற நாட்டவரும் வணங்கினர் என்று கூற விரும்பியிருக்க வேண்டும். ஒரு வேளை அவர்காலத்தில் பத்தினி வணக்கம் இந்நாடுகளில் ஏதாவதொரு வடிவில் இருந்திருத்தலும் கூடும். அது செங்குட்டுவன் காலத்திலேயே நிகழ்ந்தது போலக் காட்ட இவ்வாறு செய்தார் எனலாம். இத்தகைய முயற்சி தொடர்ந்து நடந்தது என்றற்கு உரைபெறு கட்டுரையும் சான்ருகும். சேரனும், குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும் கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தரும் பத்தினி விழா

வெடுக்கச் சோழனும் பாண்டியனும் செய்யாதிருந்தால் குறையன்றோ? எனவே உரைபெறு கட்டுரை பாண்டியனும், சோழன் பெருங்கிள்ளியும் கோட்டம் சமைத்து வழிபட்டதாகக் கூறுவதாயிற்று. வரந்தரு காதை ஏற்பட்ட பின்னரே இவ்வுரைபெறு கட்டுரை தோன்றிற்று என்பதற்கு "வரம்தரும் இவளோர் பத்தினிக் கடவுள்" என்ற தொடர் சான்றாகலாம். இன்னொன்றையும் ஈண்டு நினைக்கலாம். சாத்தனார் இயற்றிய மணிமேகலையில் 30 காதைகள் இருக்க இதில் 29 இருப்பதனைக்கண்டு இதனையும் 30 காதைகள் கொண்டதாக்க எண்ணியிருக்க இடமுண்டு.

இனி இப்பகுதியிலுள்ள முரண்பாடுகளைக் காண்போம். கண்ணகியின் வரலாறு முற்றும் சாத்தனார் செங்குட்டுவனிடம் கூறினார் என்பது காட்சிக் காதையில் கூறப்பட்டது எனவே செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் சமைக்க எண்ணுவதற்கு முன்பே இவ்வரலாற்றினை அறிந்துள்ளான். மீண்டும் நீர்ப்படைகாதையில் மாடலன் தோன்றி இதே வரலாற்றினை விரித்துப் பேசுகின்றான். "மாதவி மடந்தை கானற்பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெரித்தது" என்பது செங்குட்டுவனுக்குத் தெரியும். என்றாலும் பகைப்புல வேந்தர்க்குத் தெரியவேண்டும் என்பதற்காகவே "பகைப்புல வேந்தர் பலரீங்கறியா நகைத்திறங்கூறினை நான்மறையாள, யாது நீ கூறிய உரைப்பொருள் ஈங்கு" என்றான். மாடலன் அனைத்தையும் விரித்துரைக்கிறான். இங்கு மாதவி மணிமேகலையைத் துறவியாக்கிய செய்தி விவரமாகவே உள்ளது. வரந்தரு காதையின் தொடக்கமே இதற்கு முற்றும் முரணாகவுள்ளது சேரமான் தேவந்திகையைச் செவ்விதின் நோக்கி,

> "வாயெடுத்து அரற்றிய மணிமேகலை யார்
> யாதவள் துறத்தற்கு ஏது?" என்று வினவுகிறான்.

இதற்குத் தேவந்தி விடை கூறுவதிலும் புதுமை காணப்படுகிறது. கோவலன்தாதையும், கண்ணகிதாதையும் துறவெய்தவும், இருபெரு நற்றாயரும் உயிர்விடவும் கேள்வியுற்ற மாதவி தன் நற்றாய் ஏதும் வினவாதிருக்கும் போதே "நற்றிறம் படர்கேன், மணிமேகலையை வான் துயர் உறுக்கும் கணிகையர் கோலம் காணாது ஒழிக" என்று கூறிக் "கோதைத் தாமம் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்தறம் கொண்டாள் என்பது நீர்ப்படை காதைச்செய்தி, மணிமேகலை பருவமடையவும்" தலைக்கோலாசான் பின்னுளனாகக் குலத்தலைமாக்கள் கொள்கையிற் கொள்ளார், யாது நின் கருத்து என்

செய்கோவென "மாதவி நற்ருய் தன் மகளைக் கேட்டாள் என்றும் மாதவி" வருகவென் மடமகள் மணிமேகலை' என்று கூறி "கோதைத்தாமம் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்து அறப்படுத்தினள்" என்பதும், அது கேட்ட நகரமும் மக்களும் ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர் போலத் துன்பம் எய்தினர் என்பதும் வரந்தரு காதைச் செய்தியாகும். அது மட்டுமன்றி மணிமேகலை தான் துறவுக்கோலம் பூண்ட செய்தியை அறவண அடிகட்கு அறிவித்ததாகவும் இப்பகுதி கூறுகிறது. முன்னுள்ள காதைகளில் அறவண அடிகள் பற்றிய செய்தி இல்லை. அறவண அடிகள் என்ற பெயர் இல்லாவிட்டா லும் 'செம்மொழி மாதவர்' என்ற பகுதிக்கு அறவணர் என்றே அறிஞர் நாட்டார் உரையெழுதியுள்ளனர். "இங்குக் கூறப்பட்ட உவமையும் கூட மணிமேகலையில் இடம் பெறுவதே" ["அரும் பெறல் மாமணி ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று மையல் நெஞ்சமொடு" - மணி 2: 72-74] எனவே மணிமேகலை தோன்றிய பிறகு அதனைத்தழுவியே இப்பகுதி இதில் சேர்க்கப் பட்டமை தெளிவு.

பாசண்டச் சாத்தனுடைய கதை புகார்க் காண்டத்தில் உள்ள கனுத்திறமுரைத்த காதையில் கூறப்பட்டுள்ளது. அது மீண்டும் வரந்தரு காதையில் மாடலன் வாயிலாகக் கூறப் படுகிறது. பாசண்டன் கூற்ருகப் புகார்க்காண்டத்தில் வரும் "மூவா இளநலம் காட்டியெம் கோட்டத்து நீவா" என்னும் தொடர் மாற்றம் சிறிதுமின்றி இக்காதையிலும் வருதல் காணலாம். பாசண்டச் சாத்தன் தேவந்திக்கு இவ்வாறு கூறி நீங்கினன் என்பதோடு இக்கதை அங்கே முடிந்தது அவன் மங்கல மடந்தையின் கோட்டத்து மறையோனுகத் தோன்றினன் என்றும், உறித்தாழ் கரகத்தினை மாடலமறையோனிடம் கொடுத்துப் போயினன் என்றும், அதிலிருந்த நீர் மங்கல மடந்தைக் கோட்டத்து அண்மையில் ஊறும் சுனை நீர் என்றும், அது தெளிக்கப்பட்டோர் பழம் பிறப்பினை உணர்வர் என்றும் தேவந்திமேல் பாசண்டன் தோன்றிக் கூறுகின்ருன் மேலும் இறந்துபோன கோவலன் கண்ணகி தாயார் அரட்டன் செட்டி யின் இரட்டை மகளிராகத் தோன்றினர் என்றும், மாதரி சேடக் குடும்பியின் மகளாகத் தோன்றினள் என்றும் புதுச்செய்திகள் இடம் பெறுகின்றன. சுவை சிறிது மற்ற வகையில் கதை நீள்வது தெரிகிறது. கண்ணகியின் தெய்வத் தன்மையைக் காட்ட இக்கதைகள் எவ்வகையிலும் உதவவில்லை. இக்கதைகள் கூறப்பட்ட பிறகு இறுதியாக இளங்கோவின் துறவு பேசப்

படுகிறது. கண்ணகியின் வரலாற்றைப் படிக்கிறோம் என்ற உணர்வே மங்கிடும் வகையில் இப்பகுதி அமைவதோடு கூறியது கூறலாகவும், மாறுகொளக் கூறலாகவும் ஆகி உயர்ந்த காப்பிய ஆசிரியர்க்குக் குற்றமுண்டாக்குகிறது. இச்சான்றுகளால் வரந்தருகாதை சிலம்பாசிரியரின் வாக்கே அன்று என்று அறியலாம்.

சிலப்பதிகாரத்தின் இறுதியிலமைந்த வரந்தரு காதை சிலம்பாசிரியரா லன்றி மிகவும் பிற்காலப் புலவரொருவரால் எழுதப்பெற்று இணைக்கப்பட்டது என்றும், பதிகத்தை எழுதியவரே இதனையும் எழுதியிருக்கக்கூடும் என்றும் முன்னர்க் கூறப்பட்டது. சிலம்பின் ஏனைய காண்டங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் மட்டுமன்றித் தொடர்களும் பேரளவில் எடுத்தாளப் பட்டுள்ளமையைக் காணலாம். இப்பகுதியினை ஆசிரியர் எழுதி யிருப்பின் ஏறத்தாழப் பதினான்கு தொடர்கள் கூறியது கூறலாக இவ்வொரு பகுதியில் மட்டும் இடம் பெற வாய்ப்பில்லை யென்று அறியலாம். அவை வருமாறு :-

1 ஊழிதொ றூழி உலகம் காத்து
வாழ்க எங்கோ வாழிய பெரிதென — நீர்ப் 139-140
"ஊழிதோ றூழி உலகம் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை யென்ற"
— வரந் 145-146

2 கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் கொள்ளவும் — நீர் 107-08
"கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"
— வரந் 27-28

3 'ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்"
— கால்கோள் 62
'ஆடக மாடத்து அரவணைக் கிடந்தோன்' — வர 51

4 'செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ கோளாய்' — கால் 98-99
'ஆனே றூர்ந்தோன் அருளில் தோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னாதலின்' — வர 141-142

5 'மூவா இளநலம் காட்டியெம் கோட்டத்து
நீவா வெனவுரைத்து நீங்கலும்' — கனா 35-36

'மூவா இளநலம் காட்டியெம் கோட்டத்து
நீவா வென்றே நீங்கிய சாத்தன்' — வரந் 86-87

6 'பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாட்கு' — கனு 15
'பாசண்டச் சாத்தன்பால் பாடு கிடந்தாட்கு' — வரந் 78

7 'அணிமே கலையார் ஆயிரம் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று'
— அடைக் 38-39

'அணிமே கலையார் ஆயத் தோங்கிய
மணிமே கலைதன் வான்றுற வுரைக்கும்' — வரந் 8-9

8 'என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்'
— அடை 137
'என்னோ டிருந்த இலங்கிழை நங்கை' — வரந் 104

9 'மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி அறவோன் தன்முன்
மணிமே கலையை மாதவி யளிப்பவும்'
— அடை 101-04

'உருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமம் ... ...' — வரந் 25-27

10 இடிக்கலப் பன்ன ஈரயிர் மருங்கிற்
கடிப்பகை காணும் காட்சிய தாகிய
விரைமலர்த் தாமரை வீங்குநீர்ப் பரப்பின்'
— கடலாடு 146-147

'கடிப்பகை நுண்கலும் கவரிதழ்க் குறுங்கலும்
இடிக்கலப் பன்ன இழைந்துகு நீரும்
உண்டோர் சுனை' — வரந் 57-58

11 'வடதிசை வணக்கிய மன்னவ ரேறென்'
— நடுகற் 234
'வடதிசை வணக்கிய வானவர் பெருந்தகை'
— வரந்தரு 1

12 'பூவும் புகையும் மேவிய விரையும்' — நடுகற் 61
பூவும் புகையும் மேவிய விரையும்' — வரந் 153

13 'வலமுறை மும்முறை வாரா அலமந்து' — வஞ்சின 44
'வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி'
— வரந் 155

14 'செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்'
— காடுகாண் 184
'செவ்வரி யொழுகிய செழுங்கடை மழைக்கண்'
— வரந் 12

15 'பவகா ரணிபடிந் தாடுவீ ராயின்
பவகா ரணத்திற் பழம்பிறப் பெய்துவிர்'
— காடு 100-01

'மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
— — — — — — — — — —
உண்டோர் சுனையது அதனுள்புக் காடினர்
பண்டைப் பிறவியர் ஆகுவர்" — வரந் 53-61

பதிகமும் நூலும் :

1 "கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்பு
யாப்புற வில்லை யெனமுன் போந்து"
— கொலை 121-22

"கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்பு
யாப்புற வில்லையீங் கிருக்கென் றேகி" — பதி 23-24

2 "வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா, னாகி" — கொலை 148-49
ஷை — பதி 27-28

3 கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலப்பு கொணர்க ஈங்கென — கொலை 152-53
'கன்றிய காவலர்க் கூஉய்அக் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென' — பதி 29-30

4 'சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினோர்'
— கட்டுரை 149

"சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி" — பதிகம்

5 வானோர் தங்கள் வடிவின் அல்லதை
ஈனோர் வடிவில் காண்டல் இல்லென — கட்டுரை 175
ஷை — பதி 52-53

6 ஆரஞர் உற்ற வீர பத்தினி முன் — அழற் 155
'ஆரஞர் உற்ற வீரபத் தினிமுன்
மதுராபதி தெய்வம் வந்து தோன்றி' — பதி 47-48

7 'வாரொலி கூந்தல்நின் மணமகன் தன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி' — கட் 173
ஷை — பதி 50-51

நூலின் பகுதிகளைப் பேரளவில் எடுத்தாள்வதில் பதிகத் துக்கும் வரந்தரு காதைக்குமிடையே காணப்படும் குறிப்பிடத் தக்க ஒருமைப்பாட்டைக் காணுங்கால் இவ்விரு பகுதிகளையும் பிற்காலத்தவரான பதிக ஆசிரியரே இயற்றியிருக்கலாம் என்ற முடிவு சரியானதே என்று கூறலாம்

இனிவரந்தரு காதையில் வரும் கயவாகு பற்றியும் பிறர் பற்றி யும் காண்போம். நீலகண்ட சாத்திரியார் போன்ரோர் அவன் முதலாம் கயவாகுவாகத்தான் இருக்கவேண்டுமென்று கருதினர். சிலர் அவன் 11 ஆம் நூற்ருண்டினனுன இரண்டாம் கயவாகுவே என்கின்றனர். இவ்விரண்டாவது கருத்தை ஏற்பதில் இழுக்கொன்றுமில்லை. இப்பகுதியை எழுதிய ஆசிரியர் தம் காலத்தில் இலங்கையிலாண்ட மன்னனையே குறிப்பிட் டிருக்கலாமல்லவா? இப்பகுதியையும் நூலாசிரியரே பாடினர் என்று வாதிடுவதனுல்தான் நூல் முழுவதுமே 11 ஆம் நூற் ருண்டில் ஆக்கப்பட்டது என்பார் உளராயினர். நூலின் பிற பகுதிகள் பன்னெடுங்காலத்துக்கு முன்பே இயற்றப்பட்டனவே என்று கொண்டு இப்பகுதி மட்டும் பின்னுல் இணைக்கப்பட்டது என்று கொண்டால் எல்லாக் குழப்பங்களும் நீங்கும். 'பண்டைய கேரளம்' என்னும் நூலின் ஆசிரியர் இப்பகுதியிலுள்ள "குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்" என்ற தொடரில் குறிக்கப்பட்டவர் கி. பி. 8 ஆம் நூற்ருண்டில் தோன்றிய 'ஆளுவ' வேந்தரே என்று கூறி இந்நூலை மிகவும் பிற்காலத்துக்குத்தள்ள இட மளிப்பதும் இப்பகுதியே யாகும் பல்லவர் பற்றி இந்நூல் குறிக்காமையால் அவர்கள் சிறப்புப் பெற்ற கி. பி ஆரும் நூற்ருண்டுக்கு முற்பட்டது இந்நூல் என்று கருதுவது பொருந்துவதே. பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியத்துக்கு முன்னேடியான குரவைப் பாடல்களும் வரிப்பாடல்களும் இதில் இடம் பெற்றுள்ளமை இக்கருத்துக்கு அரண் செய்யக்கூடும். எவ்வாருயினும் மண்ணுலக வாழ்வைப் பெரிதும் போற்றிப் பாடிய சங்க காலச் சிந்தனையிலும் வேறுபட்ட சிந்தனையைக் காட்டும் சிலம்பு சங்க காலத்துக்குப் பிற்பட்டது என்பதில் ஐயமில்லை.

கண்ணகிக் கோட்டம் - வரலாற்றுச் சான்றுகள்

(சிலம்பு புலம்புகின்றது தொடர்ச்சி)

பேராசிரியர். கோ. தெய்வநாயகம்,
எம் ஏ., பி எசி; டிப்-இன்-அக்ரி, சர்டிபிகேட்-இன்-ஆர்க்.

இதுகாறுங் கூறியவற்றால்
நாமறியத்தக்க வரலாற்று உண்மைகள் :

1 கி பி இரண்டாம் நூற்றாண்டு அளவில், சுருளிமலைத் தொடரின் ஓரிடத்தின்மீது, கண்ணகியார் இயற்கையுற்ற இடத்திலேயே சேரன் செங்குட்டுவனால் கோட்டம் எழுப்பிக்கப்பட்டு வணங்கப்பெற்றார்.

2 பேராசிரியர் சி கோவிந்தராசனார் அவர்கள் சுமார் 20 ஆண்டுகள் உழைத்துக் கண்டுபிடித்த இக்கம்பம் பகுதி மங்கலதேவிமலை மீதுள்ள மங்கலதேவிக் கோட்டமே கண்ணகிக் கோட்டமாகும்.

3 சிலப்பதிகாரம் முழுமையான வரலாற்றுச் செய்திகளை உடையதாகும் வரலாற்றுச் செய்திகளே இலக்கிய ஒப்பனைகளோடு என்றும் அழியாவண்ணம் இளங்கோவடிகளால் உருவாக்கப்பட்டுள்ளன எனவே நமது முதன்மையான பண்டைய வரலாற்று நூல்களுள் சிலம்பும் ஒன்றாகும். ஏனெனில்

4 கண்ணகி-கோவலன் பிறந்து வாழ்ந்த பூம்புகார் நகர் இன்றும் பழமைச் சின்னங்களுடன் காணகிடக்கின்றது (மேலையூர்-தொல்பொருளாய்வுத்துறையினரின ஆய்வுகள)

5 கண்ணகி-கோவலன் சென்ற காவிரிக்கரை வழி இன்றும் உறையூர்க்குச் செல்கின்றது. இடையே சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே ஆற்றுவீயரங்கம் (சீரங்கம்) அமைந்துள்ளது.

6 "கொடும்பை நெடுங்குளக் கோட்டகம்" (11:71) எனச் சிலம்பில் குறிக்கப்பட்ட கொடும்பாளூர் நெடுங்குளப் பகுதி, இன்றும் திருச்சியினின்றும் மதுரை செல்லும் வழியில் (குறுக்குவழி உள்ளமை கல்வெட்டறிஞர். சி. கோவிந்தராச

ஞரின் "புகார் முதல் வஞ்சி வரை" நடத்திய ஆய்வின் வழியே புலனாகின்றது. சிலம்பில் குறிக்கப்பட்டு உள்ள வாறே கொடும்பாளூர் வறண்ட நிலப்பகுதி ஊராகவே உள்ளது.

7 மாங்காட்டு மறையோன், கண்ணகி - கோவலன் கவுந்தி யடிகள் இவர்களிடத்தே மதுரைக்குச் செல்லும் வழியாகக் கூறிய "சிவபெருமான் ஏந்தியுள்ள திரிசூலம்போல அமைந் துள்ள பாதைகளை" (11:73) இன்றும் நாம் காணலாம். அம்மூன்று பாதைகளில் ஒன்று மட்டும் காலநிலையில் முக்களால் பயன்படுத்தப்படாது உள்ளது.

8 அவ்வழிகளிலொன்றினிடையே குறிக்கப்பட்டுள்ள திருமாலிருங் குன்றம், இன்றும் திருமாலுக்குரியதாக அழகர் மலை என்ற பெயரில் பிலப்பகுதிகளை உடையதாக, சிலம்பாறு ஓடப்பெறும் சூழலில் அடர்ந்த காடுகளை உடையதாகவும் விளங்குகின்றது

9 மதுரை மாநகரோ சிலம்பில் குறிக்கப்பட்டுள்ளவாறே வையை ஆற்றிற்குத் தென்கரையில் இன்றளவும் அதே பெயரில், ஆனால் புதுமைக்கு இலக்காகி அழிந்தவை போக எஞ்சிய பழமைச் சின்னங்களோடு விளங்கி நிற்கின்றது.

10 வையை ஆறும் சிலம்பு எவ்வாறு குறிப்பிடுகின்றதோ அதே பெயரில், அதே நிலையில் உள்ளது.

11 கோவலன் கொலைப்பட்ட கொலைக்களம் இன்றளவும் "கோவலந்திடல்" என அழைக்கப்பெறுகின்றது.

12 வையையின் தென்கரை வழியே மேற்கு நோக்கிச் செல்லின், சீரற்ற பாதையே உள்ளது இக்காலத்திலேயே இப்படி யிருப்பின் சிலப்பதிகாரக் காலத்தில் அது மிகவும் கரடு முரடாகத் தானிருந்திருக்க வேண்டும்.

13 கண்ணகியார், மதுரையை அழலூட்டி, சீற்றத்தோடு வையையின் தென்கரை பற்றி மேற்கு நோக்கிச் சென்ற வழியிலேயே நாமும் செல்லின், செலவின் முடிவு கம்பம், கூடலூர் வழியே "வர்ஷ நாடு" எனக்கூறப்படும் குன்றா ரகத்துச் சென்று மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி யாகிய நெடுவேள் குன்றத்தால் தடுக்கப்படுகின்றதைக் காணலாம்.

14 எனவே மலைமீது ஏறி அம்மலையைக் கடந்தல்லது பயணத்தைத் தொடர முடியாத நிலை விஞ்ஞானம் வளராத சங்க காலத்தில் இயல்பானது. அத்தோடு உலகியலனுபவம் சிறிதுமற்ற கண்ணகியார்க்கு மலைமீது ஏறிக் கடக்கின்ற எண்ணமே. "மேற்றிசை வாயில் வறியேன் பெயர்க" எனக்கொண்ட கருத்தினால் எழுந்திருக்க வேண்டும் இதனை வலிவு படுத்தும் சான்றாக "தன்னாட்டாங்கண் தனிமையிற் செல்லாள். நின்னாட்டு அகவயின் அடைந்தனள் நங்கை" (25 : 89—90) எனும் சாத்தனாரின் வாய்மொழி விளங்குகின்றது.

15 வலிவற்றநிலையில் கண்ணகியார் அடிவைத்து ஏறிய குன்றம் முருகனுக்கு உரிய நெடுவேள் குன்றமாகும். அங்கிருந்தே சுருளி அருவியும். ஆறும், முல்லையாறும் தோன்றி வையைத் தோற்றத்திற்கு வழிகோலுகின்றன.

16 கண்ணகியார் நெடுவேள் குன்றத் தாழ்வரை மீது (அடுக்கு மலைகளின் உயரிடைப் பகுதி) வேங்கை மர நிழலில் இயற்கையுற்றார். தாழ்வரை என்பது அடுக்கு மலைகளிலே காணக் கூடிய ஒன்று அதற்கேற்பவே இம் மேற்குத் தொடர்ச்சி மலையின் கூருகிய நெடுவேள் குன்றமும் அடுக்கு மலையாகவே அமைந்துள்ளது.

17 இந்நெடுவேள் குன்றம் யானை வடிவமுடையது எனச் சிலம்பு குறிக்கும். "செங்கோட்டுயர்வரைச் சேணுயர் சிலம்பில், பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய, அணிகயம் பலவுள" (30 : 54—56) இந்த யானையின் பிடரிப் பகுதியில் அணிகயங்கள் பல உள்ளதாக இவ்வரிகள் குறிக்கின்றன. அவ்வரிகளின் உண்மையினை நேரிற் செல்லின் இன்றும் கண்ணாரக் காணலாம் அதே யானையின் தோற்றமும். பிடரிப் பகுதியில் (தாழ்வரையில்) அணிகயங்கள் உள்ள சூழலும் மனதைக் களிக்கச் செய்கின்றன.

18 மலைமீது கண்ணகிக் கோட்டம் உள்ள இடம் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளவாறே வேங்கை மரங்கள் நிரம்பப்பெற்ற சூழலில் இன்றளவும் "வேங்கைக் கானல்" என்றே அழைக்கப்படுகின்றது.

19 மலையின் பிடரிப் பகுதியாகிய "தாழ்வரை மீதிருந்து" நிலப்பரப்பழகினை நோக்குங்கால் சிலம்பு "நெடியோன்

மார்பில் ஆரம் போன்று" (25 : 21) விளங்குவதாகக் குறித்த பேரியாறு மேகக் கூட்டங்கள் விலகிச் செல்கின்ற போது நம் கட்புலனுக்குப் புலனாகி நம்மை உவப்பூட்டு கின்றது.

20 கண்ணகிக் கோட்டத்தினைச் சிலம்பு "மங்கல தேவிக் கோட்டம்" எனவும் "ஆயிழைக் கோட்டம்" எனவும் குறிக்கும். இக்கோட்டம் இன்றளவும் கூடலூர் பக்க மலைவாழ், மலைச்சாரல்வாழ் மக்களால் மங்கலதேவிக் கோட்டம் என்றே அழைக்கப்படுகிறது.

21 குன்றக் குறவர் இனத்தாராகிய "பளிங்கர்" எனும் சாதி வேட்டுவர் அம்மலைப் பகுதியில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். சிலம்பு காட்சிக்காதையில் குறிக்கும் வருடை ஆடு போன்ற மலைபடு பொருட்கள் இன்றும் அங்கு உள்ளன.

22 கோட்டத்தின் அடிப்படை, முதலுரு கருவறை, சிலை இவை கள், சங்ககாலப்பழைமை உடையன என்பதாக கல்வெட்டுப் பேரறிஞர் சி கோ. அவர்கள் கூறியதை கல்வெட்டு மேதை டாக்டர் கே. ஜி. கிருஷ்ணன் போன்ற சான்றோரும் ஒப்பி யுள்ளனர்.

23 காலப் பழமையினால், சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகிக் கோட்டம் சிதைவு அடைய பின்னாட்களில் எட்டாம் நூற்றாண்டு அளவில் சில பாண்டிய மன்னர்கள் அக்கோட்டத்தினைத் திருப்பணிசெய்து செம்மைப்படுத்தி யுள்ளனர்.

24 பின் அப்பகுதி முதலாம் இராசராச சோழனால் வெற்றி கொள்ளப்பட்டபோது இராசராசனும் கண்ணகிக்கோட்டத் திற்குத் திருப்பணியும், நிவந்தங்களும் செய்துள்ளதோடு கண்ணகி வழிபாட்டினைத் தஞ்சையிலும் கோயில்கட்டி மேற்கொண்டிருந்திருக்கின்றான்.

இத்திருப்பணிகளைக் கண்டும், திருப்பணிக் கல்வெட்டுக் களைக் கண்டும், கண்ணகிக் கோட்டத்தின் காலம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு எனவும் 11 ஆம் நூற்றாண்டு எனவும், ஒன்றும் அறியாது பொருமைக் கூச்சலாக 16 ஆம் நூற் றாண்டு எனவும் பொருத்தமின்றி யுரைப்பது எள்ளற் குரியதாகும்.

25 சிலப்பில் குறிக்கப்பட்டுள்ள " சிமயச் சென்னித் தெய்வ " (28 : 237) கோட்டமும் கண்ணகிக் கோட்ட அமைப்பில் ஒரு பகுதியாக காணப்படுகின்றது.

26 கண்ணகிக் கோட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் முத்திறத்தனவாகும்.

ஒன்று — பழைமை உடைய உடைந்தும், தேய்ந்தும் போகியுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள்.

இரண்டு — பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் இவைகளும் ஓரளவு சிதைந்தே உள்ளன. இவர்கள் செய்த கண்ணகிக் கோட்டத் திருப்பணியினை இவை விளக்குகின்றன.

மூன்று — 11 ஆம் நூற்றுண்டில் இராசராச சோழனல் செய்யப்பட்ட கண்ணகிக் கோட்டத் திருப்பணியைக் குறிக்கும் தெளிவான, முதல் இராச இராசனின் " திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் " எனத் தொடங்கும் கல்வெட்டுக்கள்.

27 சற்றேறத் தாழ 16 ஆம் நூற்றுண்டு வரையில் கண்ணகி வணக்கம் கண்ணகி வணக்கமாகவே இருந்ததற்குச் சான்ருகக் கூடலூர் (நெடுவேள் குன்ற அடிவாரத்தில் உள்ள) பெருமாள் கோயிலில் காணப்படும் மலைமீதமர்ந்த மங்கலாதேவி வழிபாட்டைக் குறிக்கும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் உள்ளன.

28 கண்ணகியாரின் சிலை சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளவாறே இரண்டாள் சுமக்கக் கூடியதாக, இமயமலைக் கல் வகையால் ஆனதாக, சிறந்த கைவன் கம்மியரால் செதுக்கப்பட்ட அழகினதாக கல்லிலேயும் முழுமையான அணிகளுடன் (ஆயிழை, பூரணி) கூடிய சிற்ப அழகுடைத்த மங்கலத் தோற்றத்தினதாக, ஒரு முலை முகம் குறைந்ததாக, காலப் பழமைக் கேற்பத் தேய்வு உடையதாக விளங்குகின்றது.

29 சிலப்பதிகார உரைபெறு கட்டுரை, கண்ணகியாரே வெப்புங்குருவும் போக்சற்கும் (அதாவது வெப்பத்தால் வரக்கூடிய அம்மை, தொழு நோய் போன்றன) மாரி பொழிதற்கும் காரணம் எனக்குறிக்கவே மாரியம்மன் என்ற பெயர்க் காரணம் நமக்குக் கிட்டுகின்றது

மேலும் "தந்தேன் வரம்" எனவும் வேள்வியால் மகிழ்வு பெறுபவராகவும், வேண்டியவற்றை வேண்டியாங்கீயும் தெய்வமாயும் விளங்கிய சிலப்பதிகார நிகழ்ச்சிகள் கண்ணகியாரே 'மகமாயி' என்பதனையும் உணர்த்துகின்றன.

30 மங்கலத் தன்மையோடு, இயற்கையுற்று தெய்வத்துள் குன்றக் குறவரால் "இவள் போலும் நங்குலக்கோர் இருந் தெய்வம் இல்லை" (24 : 10) எனக்கருதப்பட்டு வைத்து வணங்கப்பெற்றவராதலினாலும், குடமலையாட்டியாக மலைவாழ் மக்களால் வணங்கப்பெற்றமையினாலும், இளம் பெண்டிர்க்கு மங்கலம் அருளும் மங்கலத் தெய்வம் ஆதலானும் கண்ணகியார், மங்கல மடந்தை எனவும், பூரணி எனவும் வழங்கப்பெற்றுள்ளார்.

31 கண்ணகிக் கோட்டத்திலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் கண்ணகியாரை 'பூரணி' என்ற சொல்லாலும் குறிக்கின்றன.

32 கண்ணகி வணக்கம் எல்லாச் சமயத்தாரும் மேற்கொண்டு ஒழுகிய ஒன்றாகும். சேரன், சோழன், பாண்டியன், பௌத்த மதத்தினைச் சார்ந்த இலங்கை வேந்தன் கயவாகு, மாளுவ வேந்தர், குடகுக் கொங்கர், பொதுமக்கள் - அனைவரும் கண்ணகியாரை நெடுவேள் குன்றத்தாழ் வரையிலுள்ள கண்ணகிக் கோட்டத்தில் வணங்கி தத்தம் நாட்டிலும் கண்ணகியார்க்குக் கோயில் எடுத்து வணங்கியுள்ளதைச் சிலப்பதிகார, உரைபெறு கட்டுரையும், உரைப்பாட்டுமடையும், வரந்தரு காதையும் புகலுகின்றன சிலம்பு கூறுவது அனைத்தும் உண்மை என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளாக, அ. இலங்கை நாட்டில் யாங்கனும் கண்ணகிக் கோட்டங்களை அமைத்து பத்தினி வழிபாட்டை அவர்கள் நிகழ்த்தி வருகின்ற செயல்களினின்றும் அறிகிறோம்.

ஆ மதுரையில் உள்ள செல்லத்தம்மன் கோயிலில் கையில் சிலம்பு தரித்த நிலையில் உள்ள சிலையும், கோயிலும் பாண்டிய நாட்டின் பத்தினி வணக்கத்திற்குரிய சான்றாக எஞ்சியுள்ளது.

இ கண்ணகிக் கோட்ட இராசராசன் கல்வெட்டும், உரைபெறு கட்டுரையும் சோழ நாட்டில் கண்ணகி வணக்கம் நடைபெற்றதற்கான சான்றுகளாகும்.

ஈ மேலும் கொங்கிலும், குடகுப் பகுதியிலும் பத்தினிவழிபாடுள்ளதை செவிவழிச் செய்தியாக அறிகின்றோம். (கோனியம்மன், செல்லத்தம்மன் வரலாறுகள் உணர்த்துகின்றன)

இவ்வாறு இப்பத்தினித் தெய்வமாம் கண்ணகி வழிபாடு அரசுகளின் ஆதரவு பெற்றநிலையில் யாங்ஙனும் பரவலாக தமிழகம் முழுவதிலும் அவ்வவ்வரசினரால் கொண்டாடப் பட்டது. அத்தகைய நிலையில் நாட்டு வேறுபாட்டாலும், மொழி, கலாசாரம், பண்பாடு, ஒழுக்கம் இவற்றின் வேறுபாட்டாலும் பத்தினித் தெய்வமாம் கண்ணகி வணக்கமும் மாறுதலுடைய நிலையில் ஆங்காங்கே கொண்டாடப்பட்டது. அந்நிலையே இன்று கேரளாவில் காணப்படும் பகவதி வணக்கமும், மசூரிமாதா (வைசூரிமாதா) மகமாயி-மாரியாயி வணக்கமும், ஒற்றை முலைச்சி வணக்கமும், தாலியம்மன் வணக்கமுமாகும்.

33 பாமர மக்களும் கண்ணகி தேவியின் சிறப்புணர்ந்து வணங்கியமையால் அவர்களது வேண்டற்கேற்ப கண்ணகியார், பத்தினி எனவும், தாலியம்மன் எனவும், மசூரிமாதா எனவும் வழங்கப்பெற்று வணங்கப் பெறுகின்றார்.

34 சமண் சார்பினால் கண்ணகியார் 'பகவதி' எனுமுறையில் வணங்கப்பட்டிருக்கலாம்.

இச்சான்றுகளுள் 1 முதல் 28 சான்றுகள் வரை மனித நடமாட்டம் அதிகமில்லாத காரணத்தால் இன்றளவும் அழிந்து போகாமல் உள்ளன.

இவற்றையெல்லாம், தாமே தம் பொருட் செலவில் தனி மனிதனாக சுமார் 20 ஆண்டுகள் உழைத்து சிலம்பு குறிக்கின்ற வழியிலேயே நடந்து இறுதியில் தம்மாணாக்கர் முத்து. கந்தசாமியோடு மலைமீது 17—11—1963-இல் ஏறி, ஆய்ந்து, முடிவு கண்டுரைத்த பேராசிரியர் சி. கோவிந்தராசனாரின் தமிழ்த் தொண்டால் உலகிலேயே முதன்மையான நிலையில் நம் செந்தமிழ் இலக்கியம் ஒன்று முழுமையான வரலாறாகின்றது, அவர் தம் ஆய்வுத்திறம், உலகத்தொல் பொருளியலாய்வுத் துறையறிஞர்களாலும் வியக்கத் தக்கதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை

பன்னிரண்டாவது கருத்தரங்கு திருக்குறள் கருத்தகம்-2

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை திருக்குறள் பற்றிய பன்னிரண்டாவது கருத்தரங்கினை மார்ச்சு 13, 14 ஆகிய இரு நாட்களிலும் விரிவாக நடத்தியது. கடவுள் வாழ்த்தொடும் பல்கலைக் கழகத்தை நிறுவிய அண்ணாமலையரசர் வாழ்த்தொடும் ஆய்வுகள் தொடங்கின. உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் பெருமக்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் இதுகாறும் இத்துறை 200க்கு மேற்பட்ட பொருள்களில் ஆய்வுகள் நிகழ்த்தியுள்ளது எனவும் அதனால் ஆய்வுப்போக்கு ஆசிரியர்பாலும் மாணவர்பாலும் பரவி வருகிறது எனவும் கருத்தரங்கு என்பது இன்று யாரும் கலந்து கொள்ளத் தக்க அரங்காக வளர்ந்து வருகிறது எனவும் இவ்வாய்வுகள் சில நூல் வடிவு பெற்றுள்ளன எனவும் மொழிந்தார்.

13—3—76 சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் துணைப் பேராசிரியர் டாக்டர் மு கோவிந்தசாமியின் தலைமையில் திருக்குறள் கருத்தரங்கில் முதல் பகுதி தொடங்கியது திரு. சு. சோமசுந்தரம் திருக்குறள் பாயிரத்தின் பெருமை என்ற தலைப்பில் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரம் நூலின் முழுப் பொருளைக் காட்டுவது, பின்வரும் மூன்று அதிகாரங்களும் அறம் பொருள் இன்பங்களைத் தொகுத்துக் கூறுவது எனவும், பாயிரம் பாடியவர் வள்ளுவரே எனவும் உறுதிப்பட மொழிந்தார். 'திருக்குறளில் மெய்ப்பாடு' என்னும் தலைப்பில் திரு. சு. கோவிந்தராசன் முகத்திலும் கண்ணிலும் தோன்றும் மெய்ப்பாடுகளைக்குறள் வழி எடுத்துக்காட்டி, பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்ற அடியில் காணமுடியாத மெய்ப்பாடும், ஈர்ங்கை விதிரார் என்ற அடியில் நடவாத மெய்ப்பாடும் உண்டு என்று காட்டினார் திரு. அழ பழநியப்பன் 'நாமக்கல்

இராமலிங்கர் உரை' என்ற கட்டுரையில் புதுமைகாணும் வேட்கை இவ்வுரையாசிரியரிடம் மிகுதியும் காணப்படுகிறது என்று காட்டி இயல்புடைய மூவர் என்பதற்கு உறவினர் நண்பர் வறியவர் என்ற உரையின் பொருத்தத்தை ஆராய்ந்தார். திரு. ஆறு. அழகப்பன் 'திருக்குறளில் நாடகப் பாங்கு' என்ற ஆய்வுரையில் ஓரங்க நாடகங்கள் கொண்டது திருக்குறள் என விளக்கிப்புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் வரும் குறள்களை காட்சி கூற்று முறையில் அமைத்துக் காட்டி, திருக்குறள் நாடக நூலாகவும் கருதத்தகும் என முடித்தார். 'திருக்குறள் நூற்பெயர்' என்ற ஆய்வில் திரு. அ முத்துவேலன் இந்நூற்கு வழங்கும் 33 பெயர்களைத் தொகுத்துக் காட்டி அவற்றின் தன்மையை விளக்கி மூப்பால் என்பதே குறளுக்கு ஆசிரியன் வைத்த பெயர் எனத் திருவள்ளுவமாலையைச் சான்ருகக் காட்டினுர். கற்புத்துறைகள் என்ற தலைப்பில் உரையாற்றிய திரு அ. ஆனந்த நடராசன் திருக்குறள் காமத்துப்பாலைத் தொல்காப்பியத்தோடு ஒப்பிட்டுக் காட்டி பரத்தமையை வள்ளுவர் கூறவில்லை எனவும் அவர்காட்டும் கற்பு தூய்மையும் பேரின்பமும் உடையது எனவும் விளக்கினுர்.

14—3—76 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கருத்தரங்கின் இரண்டாவது பகுதி துணைப்பேராசிரியர் திரு க வெள்ளை வாரணன் தலைமையில் தொடங்கியது. வள்ளுவம்கூறும் மதமும் மெய்ப்பொருளும் என்ற தலைப்பில் திரு. சி நம்மாழ்வார் இறை, உயிர், உலகம், உயிர் இறைவனை அடையும் வழி என்ற கூறுகளை எடுத்துக்காட்டி வள்ளுவம் என்ற ஒரு புதுச்சமயம் திருக்குறளில் படைக்கப்பட்டுள்ளது என்ருர். திரு. பெ. இலக்குமிநாராயணன் முரணும் அமைதியும் என்ற ஆய்வுரையில் ஊழிற்பெருவலி யாவுள, ஊழையும் உப்பக்கம் காண்பார் உண்மை அறிவே மிகும் கற்றனைத்தூறும் அறிவு என்ற பகுதிகளில் காணப்படும் முரண்களையும் நடுவுநிலைமை கண்ணோட்டம் என்ற அதிகாரங்களில் காணப்படும் முரண்களையும் பரிமேலழகர் உரையுடன் வைத்து அவை முரண்கள் அல்ல. எனத் திறம்பட உரைத்தார், திருக்குறளில் பழமொழி என்ற ஆய்வுரையில் திரு. நா. இராமலிங்கம் பண்டைப் பழமொழிகளில் சில திருக்குறளில் இடம் பெற்றுள்ளன, திருக்குறளிலிருந்து சில பழமொழிகள் பிறந்துள்ளன என்று குறட்களைச் சுட்டி இன்று வழங்கும் பழமொழிகளோடு ஒப்பிட்டுக் காட்டினுர் பழக்க வழக்கங்கள் என்ற தலைப்பில் திரு. க. இராமச்சந்திரன் குறியெதிர்ப்பை, துச்சில்

இருத்தல், அரங்கின்றி வட்டாடுதல், தீக்காய்தல் என்றின்ன செய்திகளை வழக்கோடு ஒட்டிப்பேசினர். திரு. சுப. இராமநாதன் திருவள்ளுவமாலை என்ற ஆய்வுரையில் வெண்பா யாப்பு சங்க காலத்து மிகுதியும் இடம் பெற்றிலது எனவும், வரைவின் மகளிர் கள்ளுண்ணுமை முதலியன திருக்குறள் கூறும்புதிய கொள்கைகள் எனவும், திருவள்ளுவமாலையின் வெண்பாக்கள் பலரால் பலகாலத்தில் பாடப்பெற்றுப் பின்னர் ஒரு வடிவம் பெற்றன எனவும் எடுத்து உரைத்தார். வள்ளுவர் கூறும் மெய்ப்பொருள் என்ற தலைப்பில் திரு சிவ திருநாவுக்கரசு துறவற இயலில் வள்ளுவர் கூறும் மெய்ப்பொருளை அறியலாம் எனவும் இல்லற வியலின் முடிவே துறவறமாகும் எனவும் மண்ணில் நன்கு வாழலாம் என்ற தன்னம்பிக்கை, தன்னல மறுப்பு, மெய்யுணர்வு, உலகப்பொது அன்பு, இவை திருக்குறளின் மெய்ப்பொருள்களாம் எனவும் குறிப்பிட்டார். பழையன கழிதல் என்ற தலைப்பில் திரு. செ சந்திரசேகரன் கள்ளுண்டல், புலால் உண்ணல், வேள்வி செய்தல், பரத்தமை, அரசனின் புறக்கோலங்கள் என வள்ளுவர் கடிவனவற்றை எடுத்துக்காட்டி அவர் கூறும் புதிய அறங்களை விளக்கினர்.

14—3—76 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் கருத்தரங்கின் மூன்ருவது பகுதிக்குத் தலைமையேற்ருர். திரு சி. சிவசங்கரன் அறத்துப்பாலில் உரை வேறுபடும் குறட்பாக்கள் என்ற தலைப்பில் பாடவேறுபாட்டாலும் புணர்ச்சியாலும் இலக்கணத்தாலும் தொகையாலும் வரும் வேறுபாடுகள் சிலவற்றை எடுத்துக்காட்டி உரையாசிரியர்களின் திறந்தினை விளக்கினர். திருக்குறட் பதிப்புக்கள் என்ற தலைப்பில் திரு ச மெய்யப்பன் கி பி 1811 ஆம் ஆண்டு முதல் வந்த திருக்குறட் குறிப்புக்களைக் காலமுறைப்படி தொகுத்துத் தந்து உரைவளப் பதிப்பு உரை வேற்றுமைப் பதிப்பு, தெளிவுரைப் பதிப்பு மலிவுப்பதிப்பு, கையடக்கப் பதிப்பு, பரிசுப் பதிப்பு எனப் பலவகைப் படைப்புக்களின் தோற்றத்திற்குக் காரணத்தையும் காட்டி அவற்றின் சிறப்பினை நுண்மையாக விளக்கினர் பொருட்பாலில் உரைவேறுபடும் குறட்பாக்கள் குறித்து திரு வெ செயராமன் இரண்டு குறள்களை (87.391) எடுத்துக்கொண்டு உரையாசிரியர்கள் வேறுபடும் தன்மையைச் சுட்டிக்காட்டினர். திரு பி. கே. சார்ச்சு வீரமாமுனிவரின் இலத்தீன் மொழிபெயர்ப்பு என்ற ஆய்வுரையில் ஊழ் என்ற ஓர் அதிகாரத்தில் வைத்து முனிவரின மொழிபெயர்ப்புத் தன்மையையும் ஊழ் என்ற சொல்லுக்கு கடவுளின் தீர்ப்பு என அவர் கூறும்

பொருளையும் பரிமேலழகர் உரைக்கு மாறுபட்டு எழுதும் கருத்தினையும் புலப்படுத்தி இலத்தீன் மொழிபெயர்ப்பைத் தமிழ்ப் படுத்தினால் அது தமிழ் மக்கட்குப் பயன்படும் என்றும் அறிவுறுத்தினார். திரு. உ. பழநி தொல்காப்பியமும் திருக்குறளும் என்ற தலைப்பில் அறம் முதலாய மும்முதற் பொருட்கும் என்று கூறிய தொல்காப்பியத்தின் வழியே திருக்குறள் முப்பாலாக அமைந்தது எனவும் திருக்குறட்பாயிரம் கொடிநிலை என்ற மரபை ஒட்டியது எனவும் துறவறவியல் தொல்காப்பியப் புறத்திணை இயலின் விரிவே எனவும் பல குறிப்புக்களை எடுத்துக் காட்டினார். திருக்குறளில் பொருளமைப்பு என்ற ஆய்வுக் கட்டுரையில் திரு சோம. இளவரசு வியங்கோள் நடையில் அமைந்த திருக்குறள்களைத் தொகுத்து ஆராய்ந்து ககர ஈற்றுடன் முடிகின்ற வியங்கோள்களே பல எனவும் தாம் சொல்லும், கருத்திற்கேற்ப வியங்கோளை முன்னும் பின்னுமாக அமைத்துள்ளார் எனவும் சான்றுபடக் கூறினார்.

தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவர் திரு த. முருகேசன் இருமொழிப் புலவர் வீ. மு. சோமசுந்தரம் பிள்ளை, பூண்டிக் கல்லூரி முதுகலைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. ம. பரிமணம் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர் டாக்டர் வ. சுப மாணிக்கம் தம் முடிவுரையில திருக்குறள் பற்றிய இக் கருத்தரங்குகளில் 40க்கு மேலான ஆய்வுரைகள் நிகழ்ந்தன என்றாலும் திருக்குறள் வற்றாத கலைக்களஞ்சியம் எனவும் அதனை எந்த நோக்கில் ஆராய்ந்தாலும் ஒளிவிடுவது எனவும் வாழ்வுக்குத் துணையான அந்த நூலைத் தமிழன் ஒவ்வொருவனும் கூடவே எடுத்துச் செல்லவேண்டும் எனவும் அறிவுரை கூறினார். மகாவித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் முடிந்தது

" மண்ணில் விளையாத செங்கோல் விளைந்தது "

திரு ந மு கோவிந்தராய நாட்டார், B A. L T,

இராட்சத ஆண்டு ஆடித்திங்கள் தமிழ்ப் பொழிலில் மேற் குறித்த தலைப்பில் துணை நீதிபதி சி. இராமகிருட்டினன் அவர்கள் மிக அருமையானதொரு கட்டுரை வரைந்துள்ளார். கட்டுரை மிகச் சிறந்த நடையில் இடையிடையே இளங்கோவடிகளாரின் சொற்றொடர்களைப் பொதிந்து எழுதப்பெற்றுள்ளது. கருத்துக் களும் மறுக்கவொண்ணாதவை மிக இக்கட்டான சூழ்நிலையிலும் கோவலன் முடிவிற்கு பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறைகூற வியலாது எனக்காட்டப்பெற்றுள்ளது. எனினும் கோவலனைப் பற்றி எழுதப்பெற்றுள்ள ஐயப்பாடுகள் சரியானவைதாமா என்ற ஐயம் எமக்கேற்பட்டுள்ளது. இவைகளுக்கு அமைவு காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

கட்டுரையில் எழுப்பப்பெற்றுள்ள ஐயப்பாடுகள் :

1 கோவலன் தான் இன்னான் எனக் கொல்லனிடம் சொல்லாதது புரியாத புதிராக இருக்கின்றது. தன்னையொத்த வணிகர்களிடம் தன் நிலை பற்றிக்கூற நாணினாலும் கொல்லனிடம் கூறியிருக்கலாம்.

2 கோவலன் ஒரு பெரிய வணிகன் மகன். மன்னனிடம் தானே நேரில் சென்று கண்ணகியின் காற்சிலம்பின் அருமை பெருமையினை விளக்கி விற்க முயன்றிருக்க வேண்டும். 'அடியேன் அறியேன்' என்று பொற்கொல்லன் கூறிய பிறகும், மன்னனை நேரில் பார்க்கக் கோவலன் நினைக்காதது வியப்பிற் குரியது.

3 'வேந்தனிடம் விளம்பி வருவேன், அது வரையிலும் என் சிறு குடிசையில் இரு' என்று பொய்த்தொழில் கொல்லன் கூற வாய் திறக்காது அவனது குடிசையில் இருக்கச் சம்மதித்த கோவலனது போக்குப் புரியவில்லை.

4 அங்கிருந்தவர்களில் கோவலன் ஒருவன்தான் தன் கையகத்துள் வைத்திருக்கும் சிலம்பு அரசியினுடையதல்ல என்று வாதிட முடியும் கோவலன் வாதிட்டானா? இல்லை.

5 கோவலன் ஏன் கொலையுண்டான் என்ற கேள்வியின் திறவுகோல் கோவலனிடமே இருந்தது. குற்றஞ்சாட்டப் பட்டவனே வாய்திறந்து பேசவில்லை

6 "நான் நிரபராதி; காற்சிலம்பு என் மனைவியினுடையது" என்று கூறத்துணிய வில்லை என்றால் யாரை நோவது? ஊர்க் காப்பாளரிடமே வாய்திறக்கத் துணியாதவன் மன்னனிடம் வாய்திறந்து பேசுவான் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஆகவே கோவலன் கொலையுண்டதால் செங்கோல் வளைந்தது என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. அடிகள் கூற்று விவாதத்துக்கு உரியதே யொழிய சரியென்று ஏற்றுக் கொள்ள இயலாது

"பெரும் அறிவாளிகள் உம்கூற்றை விவாதத்துக்குரியதாக ஐயுறுமாறு சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளீரே; கோவலனை வாயில்லாப் பூச்சியாக்கி விட்டீரே' என்று நாம் இளங்கோவடி களாரைக் கேட்டால் அவர் 'நன்றாக ஆழ்ந்து எம் காப்பி யத்தைப்படித்துப்பாரும்' என்று தான் விடை கூறுவார் என எமக்குத் தோன்றுகிறது. இனி ஐயங்களை எண் வரிசைப்படி முறையாக ஆய்வாம்.

1 தான் இன்னான் எனக்கூற கோவலன் ஏன் நாண வேண்டும்? 'செல்வச்சிறப்பால் மன்னனுக்கு ஈடான பெருவணி கன் மாசாத்துவான் மகன் யான்; ஒருகணிகை மகளால குன்றம் போன்ற பெரும் செல்வத்தையும் என் மனைவியின் அணிகலன் களையும் இழந்து இக்கதிக்குள்ளாயிருக்கின்றேன்' என்று சொல்ல கோவலன் நாணவேண்டும்

தன்னிடம் இரக்கம் காட்டக்கூடிய வணிகர்களிடம் தன் நிலையைக்கூற நாணுகின்றவன் கொல்லனிடம் வாய்திறப்பானா என்பதனைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இதிலேயே இரண்டாவது ஐயத்திற்கும் விடை அடங்கியுள்ளது 'அடியேன் அறியேன் ... ... ! என்று கொல்லன்

கூறியதன் உண்மைப்பொருள் என்னவென்று சிந்திக்க வேண்டாமா? சிலம்பின் விலையை மதிப்பிடத் தெரியாது; 'ஆனால் அரசனுடைய முடிமுதற்கலன்கள் சமைப்போன்யான்' எனக்கூறியதனால் பெறப்படும் பொருள் என்ன? இந்த அற்பக் கேள்வியைக் கேட்டாயே, அரசன் முடிமுதற்கலன்களுக்கெல்லாம் விலை மதிப்பீடு செய்வேனே' என்பதுதானே பொருளாக வேண்டும்,

3. இக்கேள்விக்கு விடை கூறுமுன், கோவலன் கையிற் சிலம்பு கொண்டு 'மாறிவருவன்' அது வரையும் கலங்காதிரு என்று சொல்லி தன் காதலியிடம் விடைபெற்றுப் புறப்பட்ட போது அவனது மனநிலை எவ்வாறு இருந்திருக்கவேண்டும் என்று சிந்திக்கவேண்டும் காதலியிடமிருந்து பிரியும்போது, ஐயோ, உன்னைத்தனியே விட்டுச் செல்கின்றேனே என்று சொல்லி தன் கண்களில் பெருகிய நீரை அவள் பார்க்கா வண்ணம் துடைத்துக்கொண்டு கலங்கிய உள்ளத்தனாய், தள்ளாடி நடப்பவனாய் (வல்லா நடை) இச்சிலம்பை எவ்வாறு யாரிடம் விற்கப்போகின்றேனோ என்ற எண்ணத்துடனேயே அவன் நடந்திருக்கவேண்டும். இவ்வாறு நடந்து செல்லுங்கால், அணிகலன்கள் சமைப்பதில் சிற்பத்தொழிலில் துறை போகிய நூற்றுவர் பின் வர வந்த பொற்கொல்லன் எதிர்ப்பட்டான். இவனைக்கண்டதும் கோவலன் மனம் என்ன நினைத்திருக்கக் கூடும். ஆகா, இவன் அரசனுக்கு அணிகலன்கள் செய்யக் கூடிய புகழ்பெற்ற கொல்லனாயிருக்க வேண்டும். இனி எனக்குக் கவலை இல்லை; கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து விட்டது என்றே நினைத்திருப்பான். கோவலன் கொல்லன் குடிசையில் தங்கவில்லை. குடிசைக்கருகில் உள்ள தேவக் கோட்டத்தில் மறைவாக (சிறையகத்தில்) நின்றான் காரணம் நாணமே.

4, 5, 6 இக்கேள்விகள் எழுவதற்குக் காரணமே இல்லை கோவலனை நேரில் நிறுத்திக்கொண்டு கொல்லன் ஊர்க்காவலர் களிடம் இன்னணம் பேசியிருப்பானா? இப்பொழுது கோவலன் தளர்ந்த நிலையில் இருந்தாலும் யானையை அடக்கிய கருணை மறவனாயிற்றே கொல்லனுடைய பேச்சைக் கேட்க முடியாத சற்றுத் தொலைவில (தேவகோட்டம்) அன்றோ கோவலன் நிற்கின்றான். இதனாலேயே, 'இவன் நல்லவன், கொலைப்படும் மகனலன்' என ஊர்க்காப்பாளர் கூறியதும், கொல்லன் அவர் களை எள்ளிநகைத்து கள்வர்களின் மாய் மாலங்களைப் பற்றி ஒரு சொற்பெருக்கையே ஆற்றிவிட்டான். ஆகலின் இஃது கோவலனை முன் நிறுத்திக்கொல்லன் பேசியதன்று என அறிதல் வேண்டும்.

இரண்டாவது ஐயப்பாட்டில் கட்டுரை ஆசிரியர், 'மன்னனை நேரில் பார்க்கக் கோவலன் நினைக்காதது வியப்பிற்குரியது' என்றும் ஆறுவது ஐயப்பாட்டு விளக்கத்தில், 'ஊர்க்காப்பாள ரிடமே வாய்திறக்கத் துணியாதவன் மன்னனிடம் வாய்திறந்து பேசுவான் என்று எப்படி எதிர்பார்க்க முடியுமென்று' தம் மைத்தாமே மறுத்துக் கொண்டுள்ளார்.

மன்னனை நேரில் பார்க்கக் கோவலன் சென்றிருந்தால் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வாறு முடிந்திருக்கும் என்பதனைச் சிந்திக்க வேண்டாமா? இராமன் சீதையின் விருப்பத்திற்கு இணங்கி மானைப் பிடிப்பதற்குச் சென்றது தவறு என்று வாதிட்டால் இராமாயணக் காப்பியம் எவ்வாறு முடிந்திருக்கும்?

சிலப்பதிகாரத்தின் பதிகத்தில் கூறியுள்ள 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுவதும்' முதலிய செய்திகள் ஒரு பால் நிற்க, 'துன்பமாலையில்' 'மன்னவன் தவறிழைப்ப,' தென்னவன் தவறிழைப்ப' எனவும், 'ஊர் சூழ் வரியில்' 'வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்.' 'தென்னவன் கொற்றம் சிதைந்ததிது வென்கொல்,' 'பாண்டியன் தவறிழைப்ப' 'மன்னவன் தவறிழைப்ப' எனவும் 'கொலைக்களக் காதையில்' 'வினைவிளை காலமாதலின் யாவதும் சினையலர் வேம்பன் தேராளுகி' எனவும் 'தீவினை முதிர்வலைச் சென்றுபட்டிருந்த கோவலன்' எனவும் கூறப்பட்டுள்ளவற்றை நோக்கின் அடிகளாரின் கருத்தில் மன்னவன், தன் செங்கோல் வளைதற்குரிய பெருந்தவற்றினை இழைத்து விட்டான் என்பதும், மன்னவனும் கோவலனும் ஊழ்வினைப்பட்டார் எனவும் கொள்ளக்கிடக்கின்றன மன்னன் இழைத்ததவறு தன் மனைவியின் ஊடலைத்தீர்க்கும் போதையில். சிலம்பினைத்திருடிய கள்வன் அகப்பட்டு விட்டான் என்ற எண்ணத்தில் சிறிதும் ஆராயாமல் கோவலன் கொலைக்குக் காரணமாய் நின்றது. தெய்வப்புலவர் இதனாலேயே 'பெண்வழிச் சேறல்' என்ற அதிகாரத்தின் தொடக்கத்திலேயே

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது

எனக்கூறியுள்ளார்.

கண்ணகி வழக்குரை காதையில் 'தேராமன்ன' எனத் தொடங்கி மனுநீதிச் சோழன், சிபி ஆகிய மன்னர்களின் செங்கோன்மை பற்றிப் பேசியதும் இது குறித்தே.

ஆகலின் இளங்கோவடிகளாரின் கூற்று விவாதத்திற்குரியது அன்று என்று கொள்ளக்கிடக்கின்றது என்பதனை அறியலாம்.

சென்ற இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B. A., B L., தஞ்சை.

நிலையாமை, மெய்யுணர்வால் வந்துற்றபோது வீடு பேற்றிற்குக்காரணமாய் முப்பொருளுண்மையினை மனவுணர்வா னுணருமாறு மூன்று. அவை நற்பொருளைக் கேட்டல், ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல், உறுதி பயக்கும் உயர் நெறியினைத் தம் நுண்ணறிவில் உணர்ந்து தெளிந்தநிலையில் இறைவனைக் காண்டல் என்பன. இவை சிறப்பு வகையால், வீட்டிற்கு நிமித்த காரணமாகிய முதற் பொருளை யடைதற்குரிய நேரியமுறையாகும். இவற்றை

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாய்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு.

பிறப் பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம் பொருள் காண்பது அறிவு.

என வள்ளுவர், கேள்வி, விமரிசம், பாவனை எனும் மூவகை யால் பிரித்து விளக்கி, தன் தமிழ்ப் பொதுமறை முழங்கச் செய்வித்து அருளியுள்ளார்.

கேட்டலுடன் சிந்தித்தது தெளிதனிட்டை
கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்

என்பது சித்தியார். இவ்வாறு பாவித்தல் வழி, புலனுலும் கலனுலும் காண்டற் கரிய இறைவனை அவனது அருள் மெய் யுணர்வினுல் நுகர்ந்து தன்னைக் காண்பதுவே காண்டலாகும். கண்டதை உள்ளம் ஒரு தலையாக ஓர்த்துணர்தலே விழுப்ப மாகும் உணர்வொடு இறைவனைக்கண்ட உயிர் இறையொடு ஒன்றுங் காலை இறை உயிரொடு உடனுகின்றது 'கண்ணுல் யானும் கண்டேன் காண்க' என்பது ஆளுடைய அடிகளின் அனுபவ வாக்கு.

எனவே மெய்யுணர்வு மாற்றை ஆசிரியர் பால் அளவை முகத்தானும் இலக்கண முகத்தானும் துறைபோகக் கற்றும் கேட்டும் உள்ளத்தே ஒரு தலையாக ஆய்ந்த மெய்ப்பொருளின்

உண்மையினை மருளெல்லாம் நீங்கத்தெளிய சிந்தித்து நிறையுணர்வு எய்துதல் வேண்டும் மற்றும் உயிர்தன் அறியாமை கெட்டு, இறைவனோடு ஒற்றுமையுற அறிவாலும், சாதனமுகத்தானும் பயிற்சி முகத்தானும் பயன் முகத்தானும் பாவித்தல் வேண்டும். இவ்வழி ஓராதார் உள்ளத்திலும் ஒளிக்கும் ஒளியானைக் கண்ட உயிர், இறையைத் தன்னிடம் தோற்றுவித்து அதுவாதலாக ஒழுகலுறின், மலமாயை பிணிப்புமின்றாம். ஈட்டிய வல்வினைப் பயன்களும் கெடும்: முக்குணங்கள் நீங்க உயிர், அழிவுறாத இறையின்பத்தை என்றும் ஒரு படித்தாய் பிரிப்பின்றித்துய்த்துக் கொண்டு, இறையின் எண் குணத்தைத் தாங்கி ஓங்குநிலை எய்தும்.

— தொடரும்

அனாதைச் சிறுவர்களுக்குப் புகலிடம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில் உணவு, உடை, இருப்பிடம், வைத்தியம், படிப்பு (ஹைஸ்கூல் வரை) தொழிற் பயிற்சி ஆகியன யாவும் முற்றும் இலவசமாய் வழங்கி அனாதைச் சிறுவர்கள் காப்பாற்றப் பெற்று வருகிறார்கள் என்பதை தமிழ்நாடு நன்கறியும்.

ஆகையால், அனாதைச் சிறுவர்கள் வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் தாயும் தந்தையும் இருவருமேயில்லாத திக்கற்ற ஏழை அனாதைச் சிறுவர்களைப் பற்றி மட்டும் இங்குக் கடிதம் எழுதினால் அதற்கான அச்சுப் பாரங்கள் அனுப்பி வைக்கப்படும். ஜுன் மாதம் முதல் தேதி பள்ளி திறக்கப்படுவதால், சம்பந்தப்பட்டவர்கள் இப்போதிருந்தே மனுக்கள் அனுப்பி வைத்தால் தான் பரிசீலனை செய்து முடிவுக்கு வர காலம் சரியாயிருக்கும். முதல் வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரை சிறுவர்கள் மட்டுமே சேருவதற்கு மனு செய்யலாம். தாய் தந்தையர் யாரொருவர் இருந்தாலும், சிறுமிகளாயிருந்தாலும் மனு செய்யாதீர்கள். கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விதிகள் பாரம் அனுப்பி வைக்கப்படும்.

தலைவர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,

திருப்பராய்த்துறை - 639115.

திருச்சி மாவட்டம்.